# அன்பால்-உந்தப்பட்ட ஊழியம்



பாடம் 9 ஆகஸ்ட் 29, 2026


“அன்றியும், நீங்கள்
துக்கப்படும்படிக்கு எழுதாமல்,
உங்கள்மேல் நான் வைத்த
அன்பின் மிகுதியை நீங்கள்
அறியும்படிக்கே, மிகுந்த
வியாகுலமும் மன இடுக்கமும்
அடைந்தவனாய் அதிகக்
கண்ணீரோடே உங்களுக்கு
எழுதினேன்.”
(2 கொரிந்தியர் 2:4)



கொரிந்தியர்களுக்கு பவுல் எழுதிய இரண்டாம் நிருபத்தை நாம் ஆராயும்போது, திருச்சபையின் நலனில் அப்போஸ்தலருக்கு மிகுந்த அக்கறை இருப்பதை நாம் காண்கிறோம்.

பாவம் நிறைந்த இவ்வுலகில் தேவனுடைய வழிகளை பின்பற்றுவது ஒருபோதும் எளிதாக இருந்ததில்லை என்றாலும், முதல் நூற்றாண்டில் ஒரு நபர் தன்னை கிறிஸ்தவர் என்று வெளிப்படையாக அறிவிப்பது கடுமையான சிரமங்களை ஏற்படுத்தக்கூடியதாக இருந்தது.

உள் மற்றும் வெளி சவால்களை எதிர்கொள்ளும் வகையில் திருச்சபையை தயார்படுத்தும் பவுல், சுயநலமற்ற அன்பில் ஒன்றிணைந்த ஒரு சமூகமாக திகழ அவர்களுக்கு கற்றுக்கொடுக்கிறார். இந்த அறிவுரையிலிருந்து "ஜீவனுக்கேதுவான ஜீவவாசனையாக" நாம் எவ்வாறு திகழ்வது என்பதை இன்று கற்றுக்கொள்ளலாம்(2 கொரி. 2:16).





- துன்பத்தில் தேவனுடைய ஆறுதல்
- ஊழியப்பணியில் பரிசுத்தமும் நேர்மையும்
- ஞானத்துடன் நடந்துகொள்ளுதல்
- மன்னிப்பும் மறுசீரமைப்பும்
- கிறிஸ்துவின் நறுமணம்

# துன்பத்தில் தேவனுடைய ஆறுதல்

"தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலினாலே, எந்த உபத்திரவத்திலாகிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல்செய்யத் திராணியுள்ளவர்களாகும்படி, எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல்செய்கிறவர்." (2 கொரிந்தியர் 1:4)

பவுல் ஆறுதலைப் பற்றி மிக விரிவாக பேசும் நிருபம் கொரிந்தியருக்கு எழுதின இரண்டாம் நிருபம் ஆகும். அந்த சபை ஒரு கடினமான காலகட்டத்தை கடந்து கொண்டிருந்தது. மேலும், பவுல் எழுதிய முந்தைய கடிதம் அவர்களை ஒருவித சோகத்தில் ஆழ்த்தியிருந்தது. ஆனால் அந்த துக்கம் மனமாற்றத்திற்கு வழிவகுக்கும் "தேவனுக்கேற்ற" துக்கம் (2 கொரி. 7:10). எனவே, அந்த துக்கம் அவர்களை ஆட்கொண்டுவிடக் கூடாது என்றும், மாறாக அவர்கள் ஆறுதல் பெற வேண்டும் என்றும் பவுல் விரும்புகிறார்..



அவருடைய சொந்த உயிருக்கே ஆபத்து நேரிட்டது, அவர் மனசோர்வடைந்த காலங்களை அவரே கடந்து வந்திருந்திருந்தார் (2 கொரி. 1:8-10). ஆனால் தேவன் அவருக்கு ஆறுதல் அளித்தார், இப்போது அந்த ஆறுதலை அவர் சபைக்கு பகிர்ந்தளிக்கிறார் (2 கொரி. 1:6).

## தேவனுடைய ஆறுதல்

- இது நம்மை அச்சத்திலிருந்து விடுவிக்கிறது
- அது நமக்கு உதவிய காலங்களை இது நமக்கு நினைவூட்டுகிறது
- துன்பத்தை பொறுத்துக் கொள்ள இது நமக்கு உதவுகிறது
- இது நம்மை ஆவிக்குரிய முதிர்ச்சிக்கு இட்டு செல்கிறது
- இது மற்றவர்களுக்காக பரிந்து பேசுமாறு நம்மை ஊக்குவிக்கிறது
- தேவன் நமக்கு ஆறுதல் அளித்தது போலவே, நாமும் ஒருவருக்கொருவர் ஆறுதல் அளிக்கிறோம்

# ஊழியப்பணியில் பரிசுத்தமும் நேர்மையும்

"மாம்சத்திற்கேற்ற ஞானத்தோடே நடவாமல், தேவனுடைய கிருபையினால் நாங்கள் உலகத்திலேயும் விசேஷமாக உங்களிடத்திலேயும், கபடமில்லாமல் திவ்விய உண்மையோடே நடந்தோமென்று, எங்கள் மனது எங்களுக்குச் சொல்லுஞ்சாட்சியே எங்கள் புகழ்ச்சியாயிருக்கிறது." (2 கொரிந்தியர் 1:12)

சிலர் பவுலை பலவீனமானவர் என்று உறுதியற்றவர் என்றும் குற்றம் சாட்டி அவரை தாழ்வாக கருதினர்(2 கொரி. 10:10). இந்த காரணத்தினாலும், அவர் அளித்த அறிவுரை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதற்காகவும், அத்தகைய குற்றசாட்டுகளுக்கு எதிராக அப்போஸ்தலர் தன்னை தற்காத்து கொள்ள வேண்டியது அவசியமாக இருந்தது. ஒரு மனிதனாக, அவர் தன்னை மிக சிறியவராக கருதினார் (எபே. 3:8). ஆனால், தேவனுடைய கிருபையினால், அவர் தெளிவான மனசாட்சி கொண்டிருப்பதாக பெருமை பாரட்ட முடிந்தது (2 கொரி. 1:12).





திருச்சபைக்குள்ளும் சரி, அதற்கு வெளியேயும் சரி, அவருடைய நடத்தை பரிசுத்தமானதாகவும் நேர்மையானதாகவும் (தூய்மையானதாகவும்) இருந்தது என்று அவரும் அவருடைய சகாக்களும் உறுதியாக கூற முடிந்தது.



இதன் காரணமாகவே, பவுலின் எழுத்துக்கள் மறைமுகமான உள்நோக்கங்கள் ஏதுமற்றவையாக இருந்தன. அந்த பரிசுத்தமான மற்றும் நேர்மையான சூழலிலேயே—அதாவது, அவர்கள் மீதான அன்பினாலும் அவர்களின் நலனை மட்டுமே கருத்தில் கொண்டும் எழுதப்பட்டவை என்ற அடிப்படையில் - தமது கடிதங்கள் வாசிக்கப்பட்டு புரிந்துகொள்ளப்பட வேண்டும் என்று அவர் விரும்பினார் (2 கொரி. 1:13-14).

# ஞானத்துடன் நடந்துகொள்ளுதல்

"மேலும் நான் உங்களைத் தப்பவிடும்படிக்கே இதுவரைக்கும் கொரிந்துபட்டணத்திற்கு வராதிருக்கிறேனென்று, என் ஆத்துமாவின்பேரில் தேவனையே சாட்சியாகக் கோருகிறேன்." (2 கொரிந்தியர் 1:23)



பவுல் தனது முதல் கடிதத்தில், தான் சொல்லத் திட்டமிட்டிருந்த பாதையை பற்றி கொரிந்தியர்களுக்கு தெரிவித்தார் (1 கொரி. 16:5-11):

எபேசு → மக்கெதொனியா → கொரிந்து → யூதேயா

பிந்தைய கடிதத்தில் (அது காணாமற் போயிற்று, 2 கொரி. 7:8) தான் அவர்களை இருமுறை சந்திக்கவிருப்பதாக அவர்களுக்கு தெரிவித்தார் (2 கொரி. 1:15-16):

எபேசு → கொரிந்து → மக்கேதொனியா → கொரிந்து → யூதேயா



இருப்பினும், அவர் தனது திட்டங்களை மாற்றிக்கொண்டு, அந்த முதல் பயணத்தை மேற்கொள்ள வேண்டாம் என்று தீர்மானித்தார் (2 கொரி. 1:23). இந்த மாற்றங்கள், அவர் நிலையற்றவராகவும் உறுதியற்றவராகவும் இருப்பதாக சிலர் அவரை விமர்சிக்க வழிவகுத்தன. அவர் ஏன் தன் முடிவை மாற்றிக்கொண்டார்?

கொரிந்துவில் நிலவிய பிரச்சனைகள் காரணமாக, அங்கு பவுலின் பிரசன்னம் அவசியமாக தோன்றியது. ஆனால், அவர் அங்கு எதிர்கொள்ளவிருந்த எதிர்ப்பு ஒரு மோதலுக்கு வழிவகுக்கும் சூழலை உருவாக்கியது: அவர்கள் மீது அவர் கொண்டிருந்த மிகுந்த அன்பின் காரணமாக, அத்தகைய மோதலை தவிர்க்கவே அவர் விரும்பினார் (2 கொரி. 2:1-4).

# மன்னிப்பும் மறுசீரமைப்பும்

“எவனுக்கு நீங்கள் மன்னிக்கிறீர்களோ, அவனுக்கு நானும் மன்னிக்கிறேன்; மேலும் எதை நான் மன்னித்திருக்கிறேனோ, அதை உங்கள்நிமித்தம் கிறிஸ்துவினுடைய சந்நிதானத்திலே மன்னித்திருக்கிறேன்.” (2 கொரிந்தியர் 2:10)

பவுல் துரோவாவுக்கு சென்று கொண்டிருந்த போது, தீத்து கொரிந்துவுக்கு சென்றார். துரோவாவிலிருந்து, பவுல் மக்கெதொனியாவுக்கு சென்றார். ஆனால், கொரிந்து சபையைப் பற்றிய செய்தியை தெரிவிப்பதற்காக தீத்து துரொவாவில் தன்னை சந்திக்காததால் அவர் மிகுந்த மனவேதனை அடைந்தார் (2 கொரி. 2:12-13).

அதற்கு சற்றுப் பிறகு, தீத்து இறுதியாக மக்கெதொனியாவில் பவுலை சந்தித்தார். அப்போஸ்தலரின் அறிவுரைகளுக்கு சபை மிகவும் சாதகமாக எதிர்வினையாற்றிய விதத்தை அவர் அவரிடம் கூறினார் (2 கொரி. 7:5-9, 13-16).







அவர்கள் தீர்க்கவேண்டிய பிரச்சனைகளில் ஒன்று திருச்சபையின் ஒழுங்குமுறை சார்ந்தது. அப்போஸ்தலரின் அறிவுறுத்தலின்படி, தவறு செய்தவர் கடிந்துகொள்ளப்பட்டார்: அவரும் அந்த படிந்துகொள்ளுதலை ஏற்றுக்கொண்டார். இப்போது, அடுத்த கட்டத்தை மேற்கொள்ளுமாறு பவுல் அவர்களை கேட்டுக்கொள்கிறார்: மன்னிப்பும் மறுசீரமைப்பும் (2 கொரி. 2:5-11).

# கிறிஸ்துவின் நறுமணம்

"இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளேயும், கெட்டுப்போகிறவர்களுக்குள்ளேயும், நாங்கள் தேவனுக்குக் கிறிஸ்துவின் நற்கந்தமாயிருக்கிறோம்." (2 கொரிந்தியர் 2:15)



துரோவாவில் நற்செய்தியை வெற்றிகரமாக பிரசங்கிப்பதற்கு தேவன் எவ்வாறு ஒரு "வாசலை திறந்து வைத்தார்" என்பது குறித்து பவுல் குறிப்பிடுகையில், பவுல் துதி மற்றும் வெற்றியின் முழக்கத்தை எழுப்புகிறார்: "கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றி சிறக்கப்பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக்கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம்." (2 கொரி. 2:14).

எங்கும் பரவும் நறுமணத்தைப் போல, கிறிஸ்துவின் அறிவு ஒவ்வொரு ஆன்மாவையும் சென்றடைகிறது. நமக்கிருப்பது போலவே, கொரிந்தியர்களுக்கும் இந்த நறுமணம் நித்திய ஜீவனுடையதாக இருக்கிறது. ஆயினும், அந்த அழைப்பை நிராகரிப்பவர்களுக்கு இது மரணத்தின் வாசனையாக இருக்கிறது (2 கொரி. 2:15-16).





இதன் மூலம் ஏற்படும் பொறுப்பை பவுல், எவ்வித சுயநல நோக்கமும் இன்றி, மாறாக கேட்பவர்களின், இரட்சிப்பை மட்டுமே கருத்தில் கொண்டு அந்த செய்தி உண்மையான மனதுடன் அறிவிக்கப்பட வேண்டும் என்று விளக்குகிறார் (2 கொரி. 2:17).

“கொரிந்திய விசுவாசிகளிடையே ஒரு அற்புதமான மாற்றம் நிகழ்ந்திருந்ததைக் குறித்த மகிழ்ச்சியான செய்தியை அந்த உண்மையுள்ள தூதுவர் கொண்டு வந்தார். பலர் பவுலின் கடிதத்தில் இருந்த அறிவுரையை ஏற்றுக்கொண்டு, தங்கள் பாவங்களை நினைத்து மனந்திரும்பியிருந்தனர். அவர்களுடைய வாழ்க்கை இனி கிறிஸ்தவத்திற்கு அவப்பெயரைத் தருவதாக அமையாமல், நடைமுறைக்குரிய தேவபக்திக்குச் சாதகமான வலிமையான தாக்கத்தை ஏற்படுத்துவதாக இருந்தது. [...]தெய்வீக கிருபையின் தாக்கத்தால் இதயத்தில் உண்டாகும் மனந்திரும்புதலானது, பாவத்தை அறிக்கையிடுவதற்கும் அதைக் கைவிடுவதற்கும் வழிவகுக்கும். கொரிந்திய விசுவாசிகளின் வாழ்க்கையில் அத்தகைய கனிகளே காணப்பட்டதாக அப்போஸ்தலன் குறிப்பிட்டார்..

EGW (The Acts of the Apostles, pp. 324)